# முதல் இடைத் தேர்வு ஜூலை– 2022

**11** - ஆம் வகுப்பு

# தமிழ்

பதிவு எண். | | | | | | | |

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

## பகுதி - I

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** 10 X 1 = 10

1. 'புல்லின் இதழ்கள்' என்ற நூலின் ஆசிரியர்
   அ) ஸ்டெஃபான் மல்லார்மே ஆ) பாப்லோ நெரூடா இ) வால்ட் விட்மன் ஈ) ஆற்றூர் ரவிவர்மா
2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ................. .
   அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
3. மொழிக்கு இறுதியில் வராத எழுத்து
   அ) குற்றியலுகரம் ஆ) ண் இ) ங் ஈ) ய்
4. பாயிரம் இல்லது ................. அன்றே
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
5. 'தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம் ; கூடில்லாத பறவை' என்ற கூறியவர்
   அ) இரசூல் கம்சதோவ் ஆ) எர்னஸ்ட் காசிரர் இ) ஆற்றூர் ரவிவர்மா ஈ) பாப்லோ நெரூடா
6. தமிழ்நாட்டின் மாநில மரம்
   அ) ஆல மரம் ஆ) பனைமரம் இ) வேப்ப மரம் ஈ) தென்னை மரம்
7. உலகச் சிட்டுக்குருவிகள் நாள்
   அ) மார்ச் 20 ஆ) ஏப்ரல் 20 இ) ஜூன் 20 ஈ) ஜூன் 5
8. 'அகிற்புகை' - இலக்கணக் குறிப்பு தருக.
   அ) இரண்டாம் வேற்றுமைத் தொகை ஆ) ஐந்தாம் வேற்றுமைத் தொகை
   இ) பண்புத்தொகை ஈ) ஆறாம் வேற்றுமைத் தொகை
9. **பொருத்தமானவற்றை தேர்ந்தெடுக்க.**
   அ) அ.முத்துலிங்கம் - ஆறாம் திணை
   ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
   இ) சு.வில்வரத்தினம் - பேச்சு மொழியும் கவிதை மொழியும்
   ஈ) இந்திரன் - யுகத்தின் பாடல்
   அ) அ, ஆ ஆ) அ, ஈ இ) ஆ, ஈ ஈ) அ, இ
10. ஐங்குறுநூற்றில் முல்லைத் திணைப் பாடல்களைப் பாடியவர்
    அ) ஓரம்போகியார் ஆ) அம்மூவனார் இ) பேயனார் ஈ) கபிலர்

## பகுதி - II (பிரிவு - I)

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 X 2 = 6

11. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
12. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

13. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?

14. மசானபு ஃபுகோகா குறிப்பிடும் ஐந்து வேளாண்மை மந்திரங்கள் யாவை?

## பிரிவு - இ

**ஏவையேனும் நான்கனுக்கு விடை தருக.** 4 X 2 = 8

15. ***மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.***

அ) உலை, உளை, உழை ஆ) கனை, கணை

16. ***தமிழாக்கம் தருக.***

அ) Organic Farming ஆ) Harvesting

17. ***ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.***

அ) வைத்தார் ஆ) ஈன்ற

18. ***தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.***

அ) ஓர் பயிர் பறவை வ்ளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்.

ஆ) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.

19. ***பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.***

அ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

ஆ) தேர்வெழுத வேகமாய் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

20. உயிரீறு, மெய்யீறு - எடுத்துக்காட்டுடன் விவரிக்க.

## பகுதி - III

**ஏவையேனும் நான்கனுக்கு விடை தருக.** 4 X 4 = 16

21. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

22. 'சலச வாவியில் செங்கயல் பாயும்' - ***இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.***

23. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - ***நும் கருத்தை எழுதுக.***

24. ***தமிழாக்கம் தருக.***

அ) In nature, light creates the colour. In the picture, colour creates the light.

ஆ) Roads were made for journeys not destinations.

இ) The Pen is mightier than the sword.

ஈ) Work while you work and play while you play.

25. ***பின்வரும் வேர்ச்சொற்களை வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றுக.***

அ) வா ஆ) ஓடு

## பகுதி - IV

**விடை எழுதுக.** 1 X 6 = 6

26. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலைகளில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க. ***(அல்லது)***

யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை உயினப் பாதுகாப்பு ஆகியவற்றை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 4

27. 'ஏடு தொடக்கி' ............ எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை அடிபிறழாமல் எழுதுக.